# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | O.S.No. 11/2021 | **PW - 2** | Cross |
| **Name** | **பழனிசாமி** | **Father Name :** | **கோவிந்தன்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.09.2025 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 11.50 AM**

**1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வாதிகள் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் 1–ம் வாதி எனது அக்கா 2, 3 வாதிகள் அவரது மகன்கள். தாவா சொத்தானது வண்டி வழி பாதை, அது தற்போது தார்சாலையாக உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. சர்வே எண். 76/1D, 50/3B, 50/4A, 52/1A, 55/1C, 70/3, 69/2A ஆகிய நிலங்கள் வழியாக அந்த தார்சாலை ஜே. புதூர் கிராமத்திற்கு செல்கிறது என்று சொன்னால் மேற்படி சர்வே எண் வழியாக தான் செல்கிறது ஆனால் ஜே. புதூர் கிராமத்தை சென்றடையவில்லை. அந்த தார்சாலையை தொடர்ந்து மண் சாலை ஜே. புதூர் கிராமத்தை இணைக்கிறது என்று சொன்னால் சரிதான். ஜே. புதூர் கிராமத்திலிருந்து வண்ணம்பள்ளி ஏரிக்கு சர்வே எண் 135/1B, 136/2A, 132/1F ஆகிய நிலங்கள் வழியாக செல்கிறது என்று சொன்னால் சரிதான்.

3. ஜே. புதூர் கிராமத்தின் பழைய பெயர் என்னவென்றால் ஜங்காளகுடிசை. ஜே. புதூர் கிராமத்தில் சுமார் 500 வீடுகள் இருக்குமா என்றால் இல்லை சுமார் 30 வீடுகள் மட்டுமே இருக்கும். அந்த வீடுகளுக்கு மேற்படி சர்வே எண்களில் செல்லும் தார் சாலை வழியாகதான் செல்கிறார்கள் என்று சொன்னால் அதிலும் செல்கிறார்கள் அது இல்லாமல் வேறு சில வழிகளும் உள்ளது. நான் சொல்லும் வேறு சில வழிகள் தார் சாலை இல்லை என்று சொன்னால் சரிதான் அது மண் சாலை.

4. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது மாமா செங்கோடன் என்பவருக்கும் அவரது சகோதரர் கந்தசாமி என்பவருக்கும் பாகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அவ்வாறு பாகம் ஏற்பட்டது என்றால் சுமார் 15 வருடங்கள் இருக்கும். அந்த ஆவணத்தில் நான் ஏதாவது சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் 20 அடி பாதையை ஒதுக்கி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று கூறியுள்ளேன். அது எனக்கு நேரடியாக தெரியுமா, வாதிகள் கூறி தெரியுமா, என்றால் எனக்கு நேரடியாக தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஜே. புதூர் பொதுமக்களும் அந்த பாதையில் செல்கிறார்கள். அவர்களை தடுக்க வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆனால் இதுநாள் வரை அவர்கள் யாரையும் தடுத்ததில்லை.

5. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் பத்தி 5–ல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு 2021 ஆம் ஆண்டில் நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள். அதில் ஒரு சர்வே எண் பொறுத்து

முழுமையாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன். அந்த சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை பொறுத்து 29.01.2021 தேதியில் ஒரு பிழைத்தருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். கடந்த 2021 ஆம் ஆண்டு ஜேசிபி இயந்திரம் மூலம் வண்டி பாதையை அகலப்படுத்த பஞ்சாயத்து பாதை அமைக்க முயற்சித்தார்கள் என்று கூறியுள்ளேன்.

6. அந்த ஜேசிபி இயந்திரத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் ஜேசிபி இயந்திரம் மூலம் எந்த பாதையும் அமைக்கவில்லை, அவ்வாறு அமைக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறுதான் அமைத்தார்கள். ஜே. புதூர் மக்கள் காலம் காலமாக அந்த வழியை பயன்படுத்தி வருகிறார்கள். வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>9–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் செங்கோடன் மற்றும் கந்தசாமிக்கு பாத்தியப்பட்ட பொது வழி சம்பந்தமாக சாட்சியமளிக்க வந்துள்ளேன். அந்த பொது வழி அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணம் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. அந்த பொது வழியின் நீள அகலம் என்னவென்றால், அது தோராயமாக சென்று வருகிறது, ஒரு சில இடங்களில் 20 அடி அகலமும் ஒரு சில இடங்களில் 15 அடி அகலமும் உள்ளது. எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு நீள அகலத்தில் வழி செல்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த பொது வழியை செங்கோடன் கந்தசாமி மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால், அது செங்கோடன் மற்றும் கந்தசாமிக்கு பாதிக்கப்பட்ட பொது வழி, அதில் ஊர் மக்களும் சென்று வருகிறார்கள்.

3. ஊர் பொதுமக்கள் அந்த வழியில் எத்தனை ஆண்டுகளாக சென்று வருகிறார்கள் என்றால் சுமார் 15, 20 ஆண்டுகள் இருக்கும். அந்த பொது வழியை தற்போது தார் சாலையாக உள்ளது. தற்பொழுதும் அதை அனைவரும் தான் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த பொது வழியை ஒட்டி என்னுடைய நிலம் உள்ளதா என்றால் இல்லை. செங்கோடன் கந்தசாமிக்கு கூட்டாக பட்டா உள்ளது என்று கூறியுள்ளேன், அதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அதன் எண் எனக்கு தெரியாது. பொது வழியின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

4. அரசுக்கு தானமாக கொடுத்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன், அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லையா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த தார் சாலையை வாதிகளும் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். தார் சாலையை பயன்படுத்துவது தொடர்பாக அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் தார்சாலை அமைத்ததால்தான் வழக்கு தாக்கல்

செய்தனர். நான் சொல்வது தவறு தார்சாலை அமைத்தது தொடர்பாக அவர்களுக்கிடையில் எந்த பிரச்சினையும் இல்லை. நான் வழக்கிற்காக வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது குமரேசன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 12.20 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.